நாணயச் சபை

# இலங்கை மத்திய வங்கி

2018 யூன் 6 | நிதி குத்தகைக்குவிடல் சட்டப் பணிப்புரைகள் | 2018இன் 03ஆம் இலக்கம்

---

## மூலதன போதுமை தேவைப்பாடுகள்

2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின்கீழ் விடுக்கப்பட்டது

வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சிறப்பியல்புவாய்ந்த நிதிக் குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான குறைந்தபட்ச மூலதன போதுமை விகிதத்தினை கீழே தரப்பட்டவாறு தீர்மானித்திருக்கிறார்.

1. நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் கீழான அதிகாரமளிப்பு

1.1 நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 34ஆம் பிரிவின் நியதிகளில், நிதி குத்தகைக்குவிடும் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இல் குறிப்பீடு செய்யப்பட்ட பகிரங்கக் கம்பனிகளாக விளங்குகின்ற பதிவுசெய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடுகின்ற நிறுவனங்களுக்கு (இதனகத்துப்பின்னர் "சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள்" எனக் குறிப்பிடப்படுகின்றன) பொதுவான பணிப்புரைகளை விடுப்பதற்கு பணிப்பாளருக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2. குறைந்தபட்ச மூலதன போதுமைத் தேவைப்பாடுகள்

2.1 2018 யூலை 01ஆம் நாள் தொடக்கம் ஒவ்வொரு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியும் எல்லா நேரங்களிலும் கீழே அட்டவணை 1 மற்றும் 2 இல் விபரிக்கப்பட்டவாறு மொத்த இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளைப் பேணுதல் வேண்டும்.

**அட்டவணை 1 - ரூ.100 பில்லியனுக்கு குறைவான சொத்துக்களைக் கொண்டுள்ள நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

| மூலதனக் கூறுகள் | 01.07.2018 | 01.07.2019 | 01.07.2020 | 01.07.2021 |
|---|---|---|---|---|
| அடுக்கு 1 மூலதனம் | 6.00 | 6.50 | 7.00 | 8.50 |
| மொத்த மூலதனம் | 10.00 | 10.50 | 11.00 | 12.50 |

**அட்டவணை 2 - ரூ.100 பில்லியனை மற்றும் அதற்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொண்டுள்ள நிதி குத்தகைக்குவிடும் கம்பனிகள்**

| மூலதனக் கூறுகள் | 01.07.2018 | 01.07.2019 | 01.07.2020 | 01.07.2021 |
|---|---|---|---|---|
| அடுக்கு 1 மூலதனம் | 6.00 | 7.00 | 8.00 | 10.00 |
| மொத்த மூலதனம் | 10.00 | 11.00 | 12.00 | 14.00 |

2.2 மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூலதன போதுமை விகிதங்கள் இங்கேயுள்ள பின்னிணைப்பு அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளுக்கான மூலதன போதுமை தேவைப்பாடுகள் மீதான கட்டமைப்பில் காட்டப்பட்டுள்ள முறையியல்கள் மற்றும் தேவைப்பாடுகளுக்கிணங்க கணிக்கப்படுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 3. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல் | 3.1 | ஒவ்வொரு நிதி குத்தகைக்குவிடும் கம்பனியும் மூலதன போதுமை தேவைப்பாடுகளின் கணிப்புத் தொடர்பான விபரங்களை பின்னிணைப்பு அட்டவணை II இல் தரப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையிடும் படிவங்கள் ஒவ்வொரு மாதத்தினதும் இறுதிக் கலண்டர் நாளன்று உள்ளவாறான நிலைமையினை அறிக்கையிடுவதுடன் அதனை வெப்பினை அடிப்படையாகக் கொண்ட முறைமையூடாக 15 நாட்களுக்குள் சமர்ப்பித்தலும் வேண்டும். |
| 4. இணங்குவிப்பு நிகழாத சந்தர்ப்பத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் | 4.1 | மேற்குறிப்பிட்ட பணிப்புரைகளுக்கு சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்று இணங்கி நடக்காத சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் பின்வருவனவற்றில் ஏதேனுமொன்று தொடர்பில் அல்லது பலவற்றின் மீது நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>(i) பங்கிலாபங்களின் பகிர்ந்தளிப்பு மீது அல்லது இலாபங்களை இலங்கைக்கு வெளியில் அனுப்பும் நடவடிக்கைகளின் மீது கட்டுப்பாடுகளை விதித்தல்<br>(ii) ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன நியமங்களை மேலும் மோசமடையச்செய்யும் ஏதேனும் வியாபார நடவடிக்கைகளை இடைநிறுத்தல் |
| | 4.2 | அத்தகைய இணங்கிச்செல்லாமைகள் சீர்செய்யப்படுமிடத்து மேற்குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை பணிப்பாளர் நீக்கிவிடுதல் வேண்டும். |
| 5. விளக்கங்கள் | 5.1 | இப்பணிப்புரைகளில்<br>(i) பிரிவு 2.1 இன் அட்டவணை 1 மற்றும் 2 தொடர்பில் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனியொன்றின் சொத்துக்களினது பெறுமதி, கிடைக்கத்தக்கதாயிருக்கும் பிந்திய கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.<br>(ii) "பணிப்பாளர்" என்பதன் பொருள் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப்பொருள்படும். |
| 6. முன்னைய பணிப்புரையினை இரத்துச்செய்தல் | 6.1 | 2011ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடும் (மூலதன போதுமை விகிதம்) பணிப்புரை இரத்துச்செய்யப்படுகின்றது. |

**டபிள்யூ ரணவீரா**
பணிப்பாளர், வங்கியல்லா நிதி நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அடிக்குறிப்பு:** இப்பணிப்புரையின் பின்னிணைப்பு அட்டவணை I மற்றும் II என்பன https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/Finance_Leasing_Act_Directions_No_3_of_2018_e.pdf இல் கிடைக்கத்தக்கதாகவுள்ளன.